முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் பல்வேறு நலத்திட்ட உதவிகளைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், திருச்சி, கொட்டப்பட்டு பகுதியில் செயல்பட்டு வருகிற இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் ரூ.33.29 கோடி மதிப்பில் 526 புதிய வீடுகள் கட்டுவதற்கு நேற்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டி அதற்கானப் பணிகளை தொடங்கி விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார். இதில் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, எஸ்.எஸ்.சிவசங்கர் மற்றும் அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.

திருச்சி கிழக்குத் தொகுதி மாநகராட்சி 21 வது வார்டில் பொது நிதி ரூபாய் 16.7 லட்சம் மதிப்பீட்டில் உயர் மின் கோபுரம் விளக்குகள் மற்றும் அலங்கார விளக்குகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அர்ப்பணித்து வைத்தார் .இந்நிகழ்வில் கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், பகுதி கழகச் செயலாளர் மோகன், மாமன்ற உறுப்பினர் மும்தாஜ் பேகம், வட்டக் கழகச் செயலாளர் முபாரக் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உடன் இருந்தனர் .

பாசிச பா.ஜ.க அரசின் யு.ஜி.சி – 2025

வரைவு நெறிமுறைகளை திரும்பப்பெற வலியுறுத்தி கருத்துகளைப் பதிவு செய்வீர்!

பொதுமக்கள் – மாணவர்கள் – பெற்றோர் – கல்வியாளர்களுக்கு

கழக மாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் வேண்டுகோள்!

சென்னை, ஜன.29-

கல்வி உரிமைக்குப் பேராபத்து வந்துள்ளது. கூட்டாட்சியைச் சீர்குலைத்து, மாநில அரசின் உரிமைகளை பறிக்க நினைக்கும் யு.ஜி.சி.-க்கு கடும் கண்டனம் தெரிவித்து - பாசிச பா.ஜ.க. அரசின் யு.ஜி.சி.-2025 வரைவு நெறிமுறைகளை திரும்பப் பெற வலியுறுத்தி, பொதுமக்கள், மாணவர்கள், இளைஞர்கள், பெற்றோர்கள், கல்வியாளர்கள் ஆகியோர் தங்களது கருத்துகளை பதிவு செய்வீர் என மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :

எல்லோரும் படித்து, எல்லோரும் வேலைக்குப் போய், எல்லோரும் தலைநிமிர்வது பிடிக்காத பாசிச பா.ஜ.க. அரசால் தொடர்ச்சியாக கல்வித் துறையில் தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. கல்வியைச் சிதைப்பதற்காகவே புதிய தேசிய கல்விக் கொள்கையைக் கொண்டு வந்து திணிக்கிறார்கள். அரசுப் பொதுத் தேர்வு என்ற பெயரால் வடிகட்டி, வடிகட்டி அனைவரையும் கல்வியைத் தொடர முடியாமல் செய்துக் கொண்டிருக்கிறார்கள். அதனை திராவிடமாடல் நாயகன், முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு கடுமையாக எதிர்த்துக் கொண்டிருக்கிறது.

நிதிநல்கைக் குழு

இந்நிலையில், 06.01.2025 அன்று பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு (UGC), பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர்கள் மற்றும் கல்விப் பணியாளர்கள் நியமனம் மற்றும் பதவி உயர்வுக்கான குறைந்தபட்சத் தகுதிகள் மற்றும் உயர்கல்வியின் தரத்தைப் பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் விதிமுறைகள்-2025க்கான வரைவு ஒன்றை வெளியிட்டுள்ளது. இது, முழுவதுமாக அரசியலமைப்பு சட்டத்திற்கு முரணாகவும், பல்கலைக்கழகங்களை உருவாக்கி நிர்ணயிக்கும் மாநில அரசின் உரிமைகளை பறிக்கக் கூடிய வகையில் அது அமைந்துள்ளது. குறிப்பாக, கல்லூரி ஆசிரியர்கள் பணி நியமனத்திற்கும், பதவி உயர்வுக்கான விதிமுறைகளில் பரிந்துரைக்கும் பல திருத்தங்கள் கல்லூரிகளின் தரத்தை உயர்த்துவதற்காக என்பதை விட, கல்வியை தனியார்மயமாக்குதலில் உள்ள காரணத்தையே அது உணர்த்துகிறது. துறைகளுக்கு தொடர்பில்லாத அன்னியர்களை ஆசிரியர்களாக பரிந்துரைக்கிறது; ஆசிரியர் பணி நலன்கள் தொடர்பான அரசு சட்டங்களை ரத்து செய்யவும்; குறிப்பிட்டதுறைகளில்நிபுணத்துவத்திற்கான உயர்கல்வி பாடத்திட்டங்களை சத்தற்ற பொதுக்கல்வியாக்கும் திட்டங்கள்; பள்ளி கல்வியை ஓரங்கட்டிவிட்டு தேசிய நுழைவுத் தேர்வுகள் அடிப்படையில் உயர்கல்வி மாணவர் சேர்க்கையை நடைமுறைப்படுத்துதல்; அதன்மூலம் கார்ப்பரேட் 'கோச்சிங்' நிறுவனங்களை கொழுக்க வைக்க உதவும் விதிகள்; உயர்கல்வியை நிறைவு செய்ய விடாமல் நலிந்த சமூக பிரிவு மாணவர்களின் 'இடைநிற்றலை' ஊக்குவிக்கும் சமூக அநீதிக்கான விதிகள்; துணைவேந்தர் தேர்வு உள்ளிட்ட அனைத்து தேர்வு குழுக்களிலும் ஒன்றியத்தின் நியமன உறுப்பினர்களின் ஆதிக்கத்திற்கு வழி செய்யும் விதிகள்; ஒட்டுமொத்தத்தில் கல்வி அமைப்புகளின் ஜனநாயக கூறுகளை அறவே ஒழிக்கும் விதிகளாக உள்ளது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர்களை நியமிப்பதில், மாநில அரசுக்கான உரிமையை அறவே நீக்கிவிட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஆளுநருக்கே முழு அதிகாரத்தையும் வழங்கும் விதிமுறை மாநில உரிமைக்கு எதிரானது. கூட்டாட்சித் தத்துவத்திற்கு முரணானது. அத்துமீறலுக்குரியது.

மேலும், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்படுவதற்கு கல்வியாளர் மற்றும் கல்வித் தகுதி, அனுபவம், சிறப்பு தகுதிகள் உள்ளிட்டவைகளை கடந்து தொழிற்சாலையிலிருந்து, பொதுத்துறை நிறுவனத்திலிருந்து வல்லுநர் என்ற வகையில் கல்வியாளர் அல்லாத (Non Acadamician) நபர்களை துணைவேந்தராய் நியமிக்கும் ஆபத்தான முடிவுக்குப் பரிந்துரைக்கிறது.

பல்கலைக் கழகங்களை முடக்கும் செயல்!

தேசிய கல்விக் கொள்கை 2020ஐ ஏற்கவில்லை என்றால் அத்தகைய பல்கலைக்கழகங்கள் பட்டப் படிப்பை நடத்த இயலாது. அதாவது பல்கலைக்கழகம் பட்டம் வழங்கினாலும் செல்லாது. இந்த அறிவிப்பு மாநிலப் பல்கலைக்கழகங்களை முடக்கும் செயல் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

ஆக, இனி மாநிலம் என்ற ஒரு அரசமைப்பே இருக்காது என்ற நிலையை நோக்கி ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசின் செயல்பாடு இருப்பதன் வெளிப்பாடாக பல்கலைக்கழக வரைவு விதிகள் இருப்பதை நாம் உணர வேண்டும்.

பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்கள் நியமிப்பதில் மாநில அரசுகளின் பங்கைக் கட்டுப்படுத்தும் வகையிலும், பல்கலைக்கழகங்களில் இளங்கலை மற்றும் முதுகலை படிப்புகளுக்கான சேர்க்கைக்கு நுழைவுத் தேர்வுகளை அறிமுகப்படுத்துவது உள்ளிட்ட நிர்வாக நடைமுறைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு வெளியிட்டுள்ள வரைவு நெறிமுறைகள் 2025-ஐ திரும்பப் பெற வலியுறுத்தி, கழகத் தலைவர்- முதலமைச்சர் அவர்கள் கடந்த 09.01.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் தனித்தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார்.

அந்தத் தனித் தீர்மானம் மீது உரையாற்றுகிற வாய்ப்பினை நான் பெற்றேன். அப்போது, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஏற்றியிருக்கின்ற இந்த 'தீ' இந்தியா முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பரவட்டும், பரவட்டும் என்று சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்தேன்.

கண்டனங்கள்!

கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்கள், பாசிச பா.ஜ.க. அரசின் பிற்போக்குத் தனத்தை எதிர்க்கும், முற்போக்குச் சிந்தனை கொண்ட மாநிலங்களான டெல்லி, கேரளா, தெலங்கானா, மேற்கு வங்காளம் இமாச்சல் பிரதேசம், ஜம்மு-காஷ்மீர், ஜார்கண்ட், கர்நாடகா மற்றும் பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கு கடிதம் ஒன்றை எழுதினார். அதில், பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் (யு.ஜி.சி. 2025 வரைவு நெறிமுறைகள்) அறிக்கைக்கு எதிராக தங்களது கண்டனங்களை பதிவு செய்யவும், தீர்மானம் நிறைவேற்றவும் கேட்டுக் கொண்டார். அதனைத்தொடர்ந்து, பெரும்பாலான மாநிலங்கள் தங்களது கண்டனத்தைப் பதிவு செய்ததோடு, கேரளா அரசு தனது சட்டமன்றத்திலும் இந்த வரைவு நெறிமுறைக்கு எதிராக தனித் தீர்மானத்தை கடந்த 21.01.2025 அன்று நிறைவேற்றியது.

யு.ஜி.சி.-யின் இவ்விதிகள் மாநிலங்களின் கல்வி அமைப்புகளின் தன்னாட்சி உரிமைகளை இல்லாமல் செய்து விடுகின்றன. உயர்கல்வியை சீர்குலைத்து, உயர்கல்விப் பாடத்துறைகளை நீர்த்து போக செய்து, தரமான உயர்கல்வியை நம் மாணவர்களுக்கு மறுத்து விடுகின்றன. பல வீனமான சமூகப் பிரிவு மாணவர்களின் இடைநிற்றலை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது.

தமிழ்நாட்டின் கல்வித் தரத்தை சீர்குலைக்கும் பாசிச பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக விளங்கும் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் வரைவு நெறிமுறைகள் தற்போதுள்ள உயர்கல்வியை முற்றிலுமாக வணிகமயமாக்கும் வகையிலும், ஆசிரியர்-மாணவர் நலன்களை குழிதோண்டிப் புதைக்கும் வகையிலும் உள்ளதை உணர்ந்து, அதனை உடனடியாக திரும்பப் பெற வேண்டுமென்று தி.மு.க. மாணவர் அணி கடந்த 09.01.2025 அன்று நடைபெற்ற மாணவர் அணி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியது. அதனைத் தொடர்ந்து, தி.மு.க. மாணவர் அணி உள்ளிட்ட பல்வேறு மாணவர் அமைப்புகள் கொண்ட தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு (FSO-TN) சார்பில் கடந்த 10.01.2025 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

உயர்கல்வியில் பீடுநடை போடும் தமிழ்நாட்டின் முதன்மையை வீழ்த்துவதற்காகவே பாசிச பா.ஜ.க. அரசு பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு மூலம் கொண்டுவந்துள்ள திருத்தங்களை எதிர்த்து, மாணவர் நலன், ஆசிரியர் நலன், உயர்கல்வியின் தரம், கல்வி அமைப்புகளின் தன்னாட்சி உரிமை, மாநிலங்களின் சட்டப்பூர்வமான தன்னாட்சி உரிமை, இந்திய கூட்டாட்சியின் அடிப்படை ஆகியவற்றைப் பாதுகாத்திட நாம் அனைவரும் மக்கள் இயக்கமாக செயல்பட்டு, நம் அனைவரின் கண்டன குரல்களையும் பதிவு செய்ய வேண்டியது அவசியமாகும். மக்கள் இயக்கமாக ஒன்றிணைவோம்; யு.ஜி.சி.யின் அத்துமீறலை முறியடிப்போம்!

ஒன்றிய பா.ஜ.க. அரசு கல்வித்துறையில் யு.ஜி.சி. அமைப்பை வைத்துக் கொண்டு மேற்கொள்ளும் அதிகார அத்துமீறல் போக்குகளை தடுத்து நிறுத்த தி.மு.க. வின் நீண்ட கால கோரிக்கையான கல்வியை ஒத்திசைவுப் பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வருவதே ஒரே தீர்வாக இருக்க முடியும்.

இது வெறும் கல்வி தொடர்புடையது அல்ல. ஜம்மு-காஷ்மீர் மாநிலம் எப்படி எந்த விவாதமும் இல்லாமல் ஒன்றிய பிரதேசம் (Union Territory) ஆக்கப்பட்டதோ, அதைவிட மோசமாக தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங்களையும் ஒன்றிய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் நிர்வாக அலகுகளாக மாற்றும் மிகப்பெரிய சட்ட நடவடிக்கை என்பதை நாம் உணர வேண்டும்.

குடியாட்சியை குழிதோண்டிப் புதைக்கும் செயல்!

அரசியலமைப்பு சட்டம் வழங்கியிருக்கும் சட்டம் இயற்றும் உரிமைப் பெற்ற மாநில சட்டப்பேரவைகளில் சட்டம் இயற்றப்பட்டு அமைக்கப்படும் பல்கலைக்கழகங்களை, எவ்வித சட்டம் இயற்றுகிற உரிமையும் அற்ற, நெறிமுறைகளை மட்டும் வழங்கக்கூடிய யு.ஜி.சி. என்ற அமைப்பைக் கொண்டு ஒரு மாபெரும் சட்ட விதிமீறலையும், குடியாட்சி தன்மையை குழிதோண்டி புதைக்கும் வேலையை செய்து, மாநில உரிமைகளை களவாட நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் சர்வாதிகாரத் தன்மையை மக்கள் நாம் உணர வேண்டும்.

எனவே, கழக மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர்-துணை அமைப்பாளர்கள், மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளின் முன்பாக இது தொடர்பாக சுவரொட்டிகளை ஒட்டி, தமிழ் மாணவர் மன்றம் மூலமாக கல்லூரி மாணவர்களிடம் பிரச்சாரம் மேற்கொண்டு, கல்வி உரிமை, மாநில உரிமை, கூட்டாட்சி தத்துவம், சமூகநீதி, சமவாய்ப்பு, அரசியமைப்பு சட்டம் ஆகியவற்றை காத்திட, யு.ஜி.சி. வெளியிட்டுள்ள 2025 வரைவு நெறிமுறைகள் அறிக்கையை திரும்பப் பெற வலியுறுத்தி வரும் 05.02.2025-க்குள் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள், இளைஞர்கள், கல்வியாளர்கள், கழக உடன்பிறப்புகள், தமிழ் மாணவர் மன்ற நிர்வாகிகள், கழக மாணவர் அணியினர் அனைவரும் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் இந்த வரைவு நெறிமுறைகளை எதிர்த்து, நமது மாநில அரசின் கல்வி உரிமையை பாதுகாக்க #UGC Draft Guidelines 2025 வரைவுக்கு எதிரான உங்கள் எதிர்ப்புகளை / கருத்துகளை / கண்டனங்களை draft-regulations@ugc.gov.in என்ற மின்னஞ்சலுக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

Subject : Withdraw UGC Draft Guidelines 2025

I strongly oppose the University Grants Commission's (UGC) Draft Guidelines 2025 and I request UGC to immediately withdraw it.

1. The draft gives full powers to the Chancellors (state governors who are Union government appointees) in the selection of Vice-Chancellors of universities. The proposed changes deny state governments any say in selecting V-Cs for state-run universities that are "fully funded and managed by the state governments".

2. Another key change in the draft regulations is that university Vice-Chancellors need not be academicians/professors, but can be individuals at senior levels in industry or public administration. This will lead to corporatisation and saffronization of education.

3. Education is a subject under the Concurrent List in our Constitution, and hence we consider that the move of the UGC to issue this notification unilaterally as unconstitutional.

These guidelines are against the federal principles upheld by the nation. This move not only reduces the autonomy of state governments but also threatens to undermine the diversity and inclusivity that are central to India's higher education system.

Hence I request UGC to immediately withdraw your Draft Guidelines 2025.



மேலும், மேற்குறிப்பிட்ட கருத்துகளை பொதுமக்கள் அனைவரும் தங்களது சமூக வலைதளங்களில் பகிர்ந்து, @PMOIndia @dpradhanbjp @EduMinOfIndia @ugc_india @PIB_India ஆகிய பக்கங்களை இணைத்து பதிவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் 100 நாள் வேலைத் திட்டம் உள்ளிட்ட

பல திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யாமல் வஞ்சிக்கும் ஒன்றிய அரசு!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, ஜன. 29 - தமிழ்நாட்டில் 100 நாள் வேலைத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யாமல் ஒன்றிய அரசு வஞ்சிக்கிறது என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து 28.01.2025 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உத்தரவாதத் திட்டம் (MGNREGS) என்பது கிராமப்புற இந்தியாவுக்கான ஒரு முக்கியமான ஊதிய வேலைவாய்ப்புத் திட்டமாகும். தமிழகத்தில் 76 லட்சம் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 91 லட்சம் தொழிலாளர்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளில் தீவிரமாகப் பங்கேற்று வருகின்றனர். 86% வேலைவாய்ப்பு பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதுடன் கிட்டத்தட்ட 29% தொழிலாளர்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினத்தை சேர்ந்தவர்கள். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1 லட்சம் மாற்றுத்திறனாளி தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் கடினமாக உழைத்த தொழிலாளர்களுக்கு

தினகரன்

ஜனவரி 28, 2025 செவ்வாய்க்கிழமை

ஒன்றிய அரசின் பாராமுகம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உத்தரவாதத் திட்டம் (MGNREGS) என்பது கிராமப்புற இந்தியாவுக்கான ஒரு முக்கியமான ஊதிய வேலைவாய்ப்புத் திட்டமாகும்.

தமிழகத்தில் 76 லட்சம் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 91 லட்சம் தொழிலாளர்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளில் தீவிரமாகப் பங்கேற்று வருகின்றனர். 86% வேலைவாய்ப்பு பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதுடன் கிட்டத்தட்ட 29% தொழிலாளர்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினத்தை சேர்ந்தவர்கள். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1 லட்சம் மாற்றுத்திறனாளி தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் கடினமாக உழைத்த

ஊதியத்துக்கான நிதி விடுவிப்பதில் ஏற்பட்ட தாமதம் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இதுதொடர்பாக நிலுவை தொகை ரூ.1,056 கோடியை விடுவிக்குமாறு ஊரக வளர்ச்சி அமைச்சகத்துக்கு அறிவுறுத்துமாறு பிரதமர் மோடியை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். ஆனால் ஒன்றிய அரசு காதில் வாங்கவில்லை. தமிழ்நாட்டில் உள்ள எதிர்க்கட்சிகள் ஒன்றிய அரசை வலியுறுத்தவில்லை. மாநகராட்சி, நகராட்சியில் ஊராட்சியை இணைக்க எதிர்ப்பதற்கு முக்கிய காரணமாக கூறுவது நூறு நாள் வேலை திட்டமாகும். வேலைக்கான ஊதியம் கிடைக்காததால் கிராமங்களில் பெரிய பிரச்சினையாக வந்து நிற்கிறது.

இந்நிலையில் டெல்லியில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுடன் தமிழக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று சந்தித்து பேசினார். அப்போது 100 நாள் வேலைத் திட்டத்துக்காக தமிழகத்துக்கு ரூ.1,500 கோடி வழங்க கோரிக்கை விடுத்துள்ளார். சூழ்நிலையை புரிந்து மோடிஅரசு விரைவாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

இத்திட்டத்துக்கு மட்டுமல்லாமல் பல திட்டங்களுக்கு தமிழ்நாட்டை ஒன்றிய அரசு வஞ்சிக்கிறது. ரயில்வே திட்டங்களுக்கு மத்திய பிரதேசம், குஜராத், உத்தரபிரதேசம் , ராஜஸ்தான், பீகார், ஆந்திரா ஆகிய மாநிலங்களை விட தமிழகத்துக்கு நிதி ஒதுக்கீடு மிகவும் குறைவு. புதிய ரயில்வே திட்டங்கள் போன்ற அறிவிப்புகள் கிடையாது.

பள்ளி கல்வித்துறையில் 'சமக்ர சிக் ஷா' திட்டத்தின்கீழ் வழங்கப்பட வேண்டிய முதல் தவணை விடுவிக்கப்படவில்லை. 2024-25ம் கல்வியாண்டில் தமிழகத்துக்கு ரூ.3,586 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் ஒன்றிய அரசின் பங்கு ரூ.2,152 கோடியாகும். முதல் தவணையான ரூ.573 கோடியும் முந்தைய ஆண்டுக்கான ரூ.249 கோடியும் விடுவிக்கவில்லை. பிஎம் திட்டத்தில் தமிழக அரசு இணையாததால் பள்ளி வளர்ச்சிப் பணிகளுக்கான இந்த நிதியுதவியை ஒன்றிய அரசு அரசு நிறுத்தியிருக்கிறது.

வெள்ள நிவாரண நிதி, வளர்ச்சி திட்டங்களுக்கான நிதி என எதற்கும் தமிழ்நாட்டுக்கு நிதியை ஒதுக்குவதில் ஒன்றிய அரசு பாரபட்சம் காட்டி வருகிறது. தேவையான நிதிகளைகூட வழங்காமல் ஏதோ தமிழ்நாட்டினர் அந்நியர்கள் என்ற அளவில் தான் ஒன்றிய அரசு வைத்துள்ளது. எதிர்க்கட்சியினர் ஆளும் மாநிலமாக இருப்பதால் தமிழ்நாட்டுக்கு எதுவுமே செய்யக்கூடாது என்ற மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயல்படுகிறது. மொழிகளுக்கு நிதி ஒதுக்குவதிலும் தமிழுக்கு மிகவும் குறைவாகும். அனைத்து மாநிலங்களையும் சமமாக நினைத்து திட்டங்களையும், நிதியும் ஒதுக்கீடு செய்வது தான் பிரதமர் பதவிக்கு அழகாகும். ஆனால் தேர்தல் நேரத்தில் மட்டும் அடிக்கடி வந்து திருக்குறளை சொல்லியும், உலகின் மூத்த மொழி தமிழ் என்று பெருமை கொண்டும் தமிழ்நாட்டுக்காக அத்தனையும் செய்பவர்போல பிரதமர் மோடி காட்டிக்கொள்கிறார் என்பது தமிழக மக்களின் மனதில் நீங்கா வடுவாக உள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

47 ஆயிரம் ஆசிரியர்கள் – ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு

நிரந்தரப் பணியிடங்களாக அறிவித்து சிக்கலைத் தீர்த்த முதல்வருக்கு நன்றி!

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் அறிக்கை!

சென்னை, ஜன.29-

47 ஆயிரம் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களின் தற்காலிக பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாக அறிவித்து, ஊதியம் பெறுவதில் இருந்த சிக்கலைத் தீர்த்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நெஞ்சார்ந்த நன்றிகள் என நிறுவனத் தலைவர் சா.அருணன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

2011-ஆம் முதல் கட்டாய கல்வி உரிமை சட்டத்தை ஒன்றிய அரசு கொண்டுவந்து எஸ்.எஸ்.ஏ. திட்டத்தன் கீழ் ஆசிரியர்கள் ஆசிரியர்கள் அல்லாத 47,013 தற்காலிக பணியிடங்களில் மற்றும் தற்போது ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டத்தின் கீழும்

ஆசியர்களும் ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களும் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் அனைவருக்கும் ஊதியம் கொடுப்பாணை மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஆறு மாதத்திற்கு ஒரு முறை மற்றும் ஓராண்டிற்கு என நீட்டிப்பு ஆணை வழங்கி ஊதியம் பெற்று வழங்கப்பட்டு வருகிறது. இதனால் ஊதியம் பெற்று வழங்குவதில் மிகவும் காலதாமதம் ஏற்பட்டு அவதிப்பட்டு வந்தனர். ஒவ்வொரு முறையும் கோரிக்கை வைத்து ஊதியம் பெற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார்கள் என்பதை அனைவரும் அறிவோம்.

ஒவ்வொரு அரசு ஊழியர்கள், ஆசிரியர்களும் கடன் சுமையை சார்ந்து தான் இருக்கின்றனர். வீடு கட்ட கடன், தன் பிள்ளைகளின் கல்விக் கடன், வெவ்வேறு காரணங்களுக்காக தனிநபர் கடன் என கடன் பெற்றுத்தான் குடும்பத்தை நடத்துகிறார்கள்.

ஒவ்வொரு ஊதிய கொடுப்பாணை வழங்கும் போதும் ஊதியம் பெற மூன்று மாதம் நான்கு மாதம் கூட ஆகும். இந்த சூழ்நிலையில் கடன் தவணை கட்டும்போது காலதாமதம் ஏற்படும். இதனால் அபராதத் தொகையும் சேர்த்து கட்ட வேண்டிய இக்கட்டான சூழ்நிலை வட்டிக்கு குட்டி போடும். மேலும் கடன் சுமை அதிகமாகும். இதனை சென்ற ஆட்சியிலேயே சுட்டிக் காட்டினோம். செவிக் கொடுத்து கேட்கவில்லை.

ஆனால் தற்போதைய பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களிடம் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் தொடர்ந்து கோரிக்கை வைத்தோம். எங்கள் நியாயத்தை கேட்டு முதலமைச்சர் அவர்களின் வழிக்காட்டுதலின் பேரில் 47,013 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத தற்காலிக பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாக அறிவித்து ஊதியம் பெறுவதில் இருந்த சிரமத்தை போக்கி அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் காவலராக இருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மறு உருவம் என நிருபித்து காட்டியுள்ளார் என்பதற்கு இதுவே சான்று.

மேலும் 47,013 ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாத தற்காலிக பணியிடங்களை நிரந்தர பணியிடங்களாக அறிவித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கும், பள்ளிக்கல்வித்துறை செயலாளர் மதுமதி அவர்களுக்கும் மற்றும் இயக்குநர்களுக்கும், தமிழ்நாடு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சா.அருணன் குறிப்பிட்டுள்ளார்.

இராயபுரம் கிழக்குப் பகுதி

49வது வட்டக் கழக நிர்வாகிகள் - பாகமுகவர்கள் கூட்டம்!

வட்டக் கழகப் பொறுப்பாளர் க.கலைச்செல்வன் அறிவிப்பு!

சென்னை, ஜன.29-

இராயபுரம் 49வது வட்டக் கழகப் பொறுப்பாளர் க.கலைச்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

49வது வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் கூட்டம் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஜட்ரீம் இரா. மூர்த்தி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் டாக்டர் சுபேர்கான் ராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் ஆகியோரின் ஆலோசனைப்படி இன்று (29.01.2025 - புதன்கிழமை) மாலை 7.00 மணி அளவில் தலைமை பொதுக் குழு உறுப்பினர் வே.சிவகுமார் அலுவலகத்தில் (எண்.51, அப்பா சாமி லைன், பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-21) வட்டக் கழக அவைத் தலைவர் எம்.பழனி தலைமையில் நடைபெற உள்ளது.

பி.எல்.சி பூத் கமிட்டி உறுப்பினர்கள் நியமனம் மற்றும் கழக ஆக்கப் பணிகள் சம்பந்தமாக ஆலோசிக்கப்பட உள்ளது.

எனவே கூட்டத்தில் வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டக் கழகப் பொறுப்பாளர் க.கலைச்செல்வன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

வில்லிவாக்கம் மேற்குப் பகுதி

95 வது வட்டக் கழக துணைச் செயலாளர் எம்.எம்.மாறன் மறைவு!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி - அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. அஞ்சலி!

சென்னை, ஜன. 29 -

*சென்னை கிழக்கு மாவட்டம், வில்